# <u>மேட்டூர் சார்பு நீதிமன்றம்</u>

| | | |
|---|---|---|
| **MCOP.No. 19 /2022 உ/இ 42/2021 10/2022** | **Date : 08.08.2025** | **PW** |
| Name: ரேணுகா | க/பெ.ஜீவானந்தம் | |

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை கொடுத்தது ராஜேந்திரன் ஆவார் என்றால் சரிதான். இதே நீதிமன்றத்தில் ராஜேந்திரன் 19/2022 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அந்த புகாரில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரியானது தான் என்றால் சரிதான். புகாரில் இரண்டு கார்கள் எப்படி வந்தது என்பது பற்றி குறிப்பிட்டிருந்தது என்றால் சரிதான். நான் TN 93 6087 என்ற உற ு ண்டாய் காரில் மேட்டுரில் இருந்து மேச்சேரி நோக்கி சென்றேன் என்றால் சரிதான். விபத்து மேட்டுரில் இருந்து மேச்சேரி செல்லும் போது இடதுபுறம் நடந்தது என்றால் சரிதான். இரண்டு கார்களின் உரிமையாளரையும், காப்பீட்டு தாரர்களையும் வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். இரண்டு கார்களும் அஜாக்ரதையால் ஓட்டியதால் தான் இரண்டு தரப்பு காப்பீட்டு தாரர்களையும் தரப்பினர்களாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். இரண்டு தரப்பு காப்பீட்டுதாரர்களும் எனக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இருசக்கர வாகனம் என் வாகனத்திற்கு பின்னால் வந்தது என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தின் மீது மோதாமல் இருப்பதற்காக எங்கள் வாகனத்தின் ஓட்டுனர் வாகனத்தை அங்கேயே நிறுத்தினார் என்றால் சரியல்ல. போலிசார் தயார் செய்த மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்தால் விபத்தின் உண்மை நிலை தெரியவரும் என்றால் சரிதான். நான் மாதிரிவரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு இடது பக்க தோள்பட்டையில் இருந்து முட்டி வரையுள்ள கையில் அடிப்பட்டு எலும்பு முறிவு ஏற்பட்டது. நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது என்னுடன் இருந்த உதவியாளரின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் பெயர் தெரியாது. நான் எனக்கு உதவியாக பணியாளர் வைத்தாகவும் அவருக்கு ரூ.50000/- பணம் கொடுத்தேன் என்று இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. போக்குவரத்து செலவு ரூ.50,000 பணம் கொடுத்தேன் என்று இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு மருத்துவ செலவு 87857 ரூபாய் ஆனது என்றால் சரிதான். நான் தனியார் கம்பெனியில் வேலை செய்து மாதம் ரூ.30,000/- சம்பாதித்து வந்தேன் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தற்போது வீட்டில் தான் இருக்கிறேன். நான் மருத்துவமனையில் 6 நாட்கள் உள்நோயாளியாக இருந்து விடுவிக்கப்பட்டேன் என்றால் சரிதான். பின்னிட்டு

7 நாட்கள் கழித்து என்னை மருத்துவர் வரசொன்னார்கள் என்றால் சரிதான். நான் போனேன். அதன்பிறகு மீண்டும் 7 நாட்கள் கழித்து என்னை மருததுவர் வரசொன்னார்கள் என்றால் சரிதான். நான் போனேன். அதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் அருண் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்பதற்கு ஆவணம் தாக்கல செய்யவில்லை என்றால் சரிதான் ஆவணம் என் வசம் உள்ளது. நான் அருண் மருத்துவமனையில் சிகிச்சை பெறவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எந்த வருமான இழப்போ, ஊனமோ ஏற்படவில்லை என்றால் சரிதான். நான் மனுவில் கோரியுள்ள தொகை மிகமிக அதிகம் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

**6 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது வயது, தொழில் வருமானம் காண்பிப்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வெள்ளைநிற காரில் சென்றேன் என்றால் சரிதான். எனக்கு விபத்தை ஏற்படுத்தியது சிவப்பு நிற கார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் 7 வது பத்தியில் 3 ம் எதிர்மனுதாரின் வாகனம்தான் காரணம் என குறிப்பிட்டு சொல்லியுள்ளது உண்மை என்றால் சரிதான். ஒன்றாம் எதிர்மனுதாரர் தன்னுடைய குற்றத்தை ஒப்புக்கொண்டு குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 மேட்டுரில் STC No. 1383/2022 அபராதமாக ரூ. 3000/–த்தை 2.9.2022 யில் செலுத்தியுள்ளார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. அதனால் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தான் எனக்கு நஷ்டஈடு செலுத்தவேண்டும் என்றாலும் 6 ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள தொகை மிக அதிகமானது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

ஒம்/–ரேணுகா

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/– R.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டுர்.